செ.வெ. எண் 209/2017 நாள்-12/05/2017

# உணவு பொருட்கள் தரம் குறித்தோ கலப்படம் குறித்தோ புகார் தெரிவிக்க புதிய வாட்ஸ் ஆப் எண்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தரமான மற்றும் பாதுகாப்பான உணவு பொருட்கள் வழங்கிடுவதற்கு உணவு பாதுகாப்பு துறையால் சுழற்சி முறையில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தர்.

மேலும் BIS தரச்சான்றுதல் மற்றும் FSSAI உரிமம் இல்லாத சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார்.

நுகர்வோர்களுக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் கிடைப்பதற்காக பிரத்யேக முறையில் பால் உணவு மாதிரிகள் சேகரித்து பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பி ஆய்வுமேற்கொள்ளப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்தார்.

மேலும் கலப்படம் இருப்பது தெரிந்தாலோ. தரமற்றது மற்றும் தப்பு குறியீடு என கண்டறியப்பட்டலோ இதுகுறித்த புகார்களை *9444042322* என்ற வாட்ஸ் ஆப் எண்ணில் தெரிவிக்கலாம்.

இவ்வாறு பொதுமக்கள் தெரிவிக்கப்படும் புகார்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.